**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.322/2022**

**Prosecution witness : அ.சா.4** **Date : 21.07.2025.**

| Name : சாந்தி | Caste : |
| --- | --- |
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 25/09/2022-ம் தேதி மாலை 05.30 மணிக்கு நான் நிலையப்பொறுப்பில் மூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 478/2022 ச/பி 279, 304(ஏ) (3 எண்ணிக்கைகள்) இதச வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**ஆகும்.

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) புகார் எவ்வாறு பெறப்பட்டது என்றால் புகார்தாரரால் காவல் நிலையம் வந்து கொடுக்கப்பட்டது. புகார் மனு காவல் நிலையத்தில் 25.09.2022ம் தேதி 17.30

மணிக்கு பெறப்பட்டது. விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 25.09.2022ம் தேதி மாலை 4.45 மணிக்கு நடந்தது. புகாரை அவரே எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார். புகார் யார் எழுதினார்கள் என்று நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

4) யார் எழுதினார்கள் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். விபத்து சம்மந்தமாக பெற்ற புகாரை பெற்றவுடன் உண்மை தன்மை அறியும் பொருட்டு சம்பவயிடம் சென்றேனா என்றால் இல்லை. நான் சரியாக விசாரணை செய்யாமல் புகார்தாரரின் கவனக்குறைவால் நடந்த விபத்தை மறைத்து நஷ்ட ஈடு பெற வேண்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.